**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சத்தீஸ்கரில் 71% மிஸோரமில் 77% வாக்குப் பதிவு

**ராய்பூர்/ ஐஸால், நவ. 7:** சத்தீஸ்கரில் நக்ஸல் தாக்குதலுக்கு இடையே செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதல்கட்ட பேரவைத் தேர்தலில் 71.48 சதவீத வாக்குகள் பதிவாகின.

மிஸோரமில் மொத்தமுள்ள 40 தொகுதிகளுக்கும் செவ்வாய்க்கிழமை அமைதியாக நடைபெற்ற தேர்தலில் 77 சதவீத வாக்குகள் பதிவாகின.

**சத்தீஸ்கர்:** சத்தீஸ்கரில் நக்ஸல் ஆதிக்கம் மிகுந்த பஸ்தர் பகுதியில் உள்ள 7 மாவட்டங்கள் மற்றும் இதர 4 மாவட்டங்களில் அடங்கிய 20 பேரவைத் தொகுதிகளுக்கு உட்பட்ட 5,304 வாக்குப் பதிவு மையங்களில் செவ்வாய்க்கிழமை முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது.

10 தொகுதிகளில் காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப் பதிவு பிற்பகல் 3 மணிக்கு முடிவடைந்தது. நக்ஸல் அச்சுறுத்தல் மிக்க மீதமுள்ள 10 தொகுதிகளில் பலத்த பாதுகாப்புடன் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையில் வாக்குப் பதிவு நடைபெற்றது.

முதல் கட்டமாக வாக்குப் பதிவு நடைபெற்ற 20 தொகுதிகளில் 223 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் 25 பெண் வேட்பாளர்களும் அடங்குவர்.

## நக்ஸல் தாக்குதலில் 5 வீரர்கள் காயம்



சத்தீஸ்கரின் ஜக்தல்பூரில் வாக்களிக்க காத்திருந்த பெண்கள்.

இந்தத் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்று நக்ஸல்கள் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்ததால் 60 ஆயிரம் போலீஸார் மற்றும் துணை ராணுவப் படையினரின் பலத்த பாதுகாப்புக்கு இடையே வாக்குப் பதிவு நடைபெற்றது.

சுக்மா, காங்கேர், நாராயண்பூர் ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்புப் படையினருடன் நக்ஸல் தீவிரவாதிகள் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர்.

சுக்மா மாவட்டத்தில் நக்ஸல்கள் குண்டுவெடிப்பையும் நடத்தினர். இச்சம்பவங்களில் பாதுகாப்புப் படையினர் 5 பேர் காயமடைந்தனர்.

சுக்மா மாவட்டத்தின் தோண்டாமர்கா பகுதியில் நக்ஸல்கள் நடத்திய குண்டுவெடிப்பில், நக்ஸல் எதிர்ப்பு 'கோப்ரா' படைப் பிரிவைச் சேர்ந்த கமாண்டோ காயமடைந்தார்.

இதே மாவட்டத்தின் மின்பா, துலெட் கிராமங்களுக்கு இடையிலான வனப்பகுதியில் 'கோப்ரா' படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அவர்களைக் குறிவைத்து நக்ஸல் தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதையடுத்து, இருதரப்புக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 4 வீரர்கள் காயமடைந்தனர்.

காங்கேர் மாவட்டத்திலும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாகவும், இதில் சில நக்ஸல்கள் இறந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 2018 பேரவைத் தேர்தலில் 18 தொகுதிகளுக்கு நடைபெற்ற முதல்கட்ட வாக்குப் பதிவில் 76.47 சதவீத வாக்குகள் பதிவாகின. இதில் 17 தொகுதிகளில் காங்கிரஸ் வென்றது.

பாஜகவின் முன்னாள் முதல்வர் ரமண் சிங், சத்தீஸ்கர் காங்கிரஸ் தலைவர் தீபக் பைஜ், மூன்று காங்கிரஸ் அமைச்சர்கள் முதல் கட்டத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

மொத்தமுள்ள 90 தொகுதிகளில் கடந்த முறை காங்கிரஸ் 68 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

**மிஸோரம்:** மிஸோரம் பேரவைக்கு செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஒரே கட்டத் தேர்தலில் 77 சதவீத வாக்குகள் பதிவாகின. 2018-இல் 81.61 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன.

மொத்தமுள்ள 40 பேரவைத் தொகுதிகளுக்கு செவ்வாய்க்கிழமை 1,276 வாக்குப் பதிவு மையங்களில் அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றது. 174 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் உள்ளனர். இதில் 18 பெண் வேட்பாளர்களாவர்.

**வாக்குப் பதிவு இயந்திரத்தில் கோளாறு:** மிஸோரம் முதல்வர் ஜோரம்தங்கா ஐஸாலில் உள்ள வாக்குப் பதிவு மையத்துக்கு செவ்வாய்க்கிழமை காலை வாக்களிக்க வந்தபோது வாக்குப் பதிவு இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதால் திரும்பிச் சென்றார். பின்னர் வாக்குப் பதிவு இயந்திரம் சரியான பிறகு காலை 9.40 மணிக்கு மீண்டும் வந்து வாக்களித்தார்.

கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக உள்ள இந்த மாநிலத்தில் ஆளும் மிஸோ தேசிய முன்னணி, எதிர்க்கட்சிகளான ஜோரம் மக்கள் இயக்கம், காங்கிரஸ், பாஜக என பலமுனைப் போட்டி நிலவுகிறது. நான்கு தொகுதிகளில் வேட்பாளர்களை ஆம் ஆத்மி கட்சி நிறுத்தியுள்ளது.

கடந்த தேர்தலில் மிஸோ தேசிய முன்னணி 28 தொகுதிகளில் வென்றது. ஜோரம் மக்கள் இயக்கம் 6, காங்கிரஸ் 5, பாஜக ஓரிடத்தில் வென்றன.

சத்தீஸ்கர், மிஸோரம் உள்பட ஐந்து மாநிலப் பேரவைத் தேர்தல்களில் பதிவாகும் வாக்குகள் டிசம்பர் 3-ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

EVA STALIN IAS ACADEMY

# குளம்தொட்டு வளம் பெருக்கி...



தி.இராசகோபாலன்

[illegible]

**இராசேந்திர சோழன் வடநாட்டு வெற்றியின் நினைவாக கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு ஏரியை வெட்டினான். அந்த ஏரிக்குச் சோழகங்கம் எனப் பெயரிட்டான். அங்கு ஒரு திருக்கோயிலையும் எழுப்பினான். அந்தக் கோயிலில் சிங்கமுகக் கிணறு ஒன்றையும் கட்டினான். கோயிலைச் சுற்றி உறை கிணறுகளையும் உருவாக்கினான்.**

[illegible]

கட்டுரையாளர்:
பேராசிரியர்.

# நாடற்றவர்களின் துயரம்!

உலகம் முழுவதும் அகதிகளின் துயரம் பேசப்படும் அளவுக்கு நாடற்றவர்களின் துயரம் பேசப்படுவதில்லை. என்றைக்காவது தாய்நாடு திரும்புவோம் என்கிற நம்பிக்கையாவது அகதிகளுக்கு இருக்கும். ஆனால், எந்த நாட்டின் குடிமக்களாகவும் அங்கீகரிக்கப்படாத நாடற்றவர்கள், தங்களது சொந்த நாட்டிலேயே அகதிகள்போல வாழ்ந்து வருகின்றனர்.

அகதிகளுக்கும், நாடற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்? அகதிகள் ஏதாவது ஒரு நாட்டின் குடிமக்களாக இருப்பார்கள். உள்நாட்டுப் போர் உள்ளிட்ட ஏதோ ஒரு காரணத்துக்காக சர்வதேச எல்லையைத் தாண்டியவர்கள். ஆனால், நாடற்றவர்கள் பெரும்பாலும் தாங்கள் பிறந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்பவர்கள்; சர்வதேச எல்லையைத் தாண்டாதவர்கள்.

நாடுகளின் குடியுரிமைச் சட்ட விதிகள், பல்வேறு சந்தர்ப்பங்களில் இனம், மதம், மொழியின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவது போன்றவை நாடற்றவர்கள் உருவாவதற்கு முக்கியக் காரணங்களாக உள்ளன; பாலினப் பாகுபாடு மற்றொரு காரணமாகக் கூறப்படுகிறது. சில நாடுகளின் சட்டங்களில், தந்தையின் குடியுரிமை மட்டும்தான் குழந்தைகளுக்குப் பொருந்தும்; தாயின் குடியுரிமையை வைத்து குழந்தைகளுக்கு குடியுரிமை அளிக்கப்படுவதில்லை.

ஒருவேளை தந்தை நாடற்றவராக இருந்தாலோ, காணாமல் போனாலோ, இறந்துவிட்டாலோ அவரது குழந்தைகளும் நாடற்றவர்களாகி விடுகின்றனர். புதிய நாடுகளின் தோற்றமும், நாடுகளின் சர்வதேச எல்லைகளில் ஏற்படும் மாற்றமும் அப்பகுதியில் வாழும் மக்களை நாடற்றவர்களாக்கி விடுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்கிறது ஐ.நா. அகதிகள் முகமை.

அகதிகளுக்கான ஐ.நா. முகமை (யுஎன்ஹெச்சிஆர்) அண்மையில் வெளியிட்ட ஆண்டறிக்கையின்படி 95 நாடுகளில் வசிக்கும் 44 லட்சம் பேர் நாடற்றவர்களாக அறியப்பட்டிருக்கின்றனர். பல நாடுகள் தங்கள் நாட்டில் வசிக்கும் நாடற்றவர்கள் குறித்த தரவுகளை வைத்திருக்கவில்லை என்பதால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கக்கூடும்.

பெரும்பாலும் சிறுபான்மை இனக் குழுக்களைச் சேர்ந்த இவர்கள், அரசியல், பொருளாதார ரீதியாக ஒதுக்கப்பட்டவர்களாகவும், பாகுபாடு, துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்படக்கூடியவர்களாகவும் உள்ளனர். எந்த நாட்டின் குடிமக்களாகவும் அங்கீகரிக்கப்படாததால் கல்வி, சட்டப்படியான வேலை, மருத்துவ வசதிகள் போன்ற அடிப்படை உரிமைகள்கூட நாடற்றவர்களுக்குக் கிடைப்பதில்லை. வங்கிக் கணக்கு தொடங்கவோ, திருமணம் செய்துகொள்ளவோ கூட அவர்களால் முடிவதில்லை.

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

**https://www.evastaliniasacademy.in/**

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

ஐ.நா. முகமையின் முயற்சியால் 2014–ஆம் ஆண்டுமுதல் இதுவரை 5 லட்சம் பேர் தாங்கள் வாழும் நாடுகளிலேயே குடியுரிமை பெற்றுள்ளனர். அந்த வகையில் 2023–ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஐ.நா. அறிக்கை கூறுகிறது. அதன்படி, பல்வேறு நாடுகள் நாடற்றவர்களுக்கு சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ளன.

கிர்கிஸ் குடியரசு, மால்டோவா ஆகிய நாடுகள் நாடற்றவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் நாடற்றவர்களாக இருப்பதைத் தடுக்கும் வகையில் சட்டப் பாதுகாப்பை அறிமுகம் செய்துள்ளன. நாடற்றவர்கள் என்ற நிலையை முறைப்படுத்தும் சட்டக் கட்டமைப்புக்கு போர்ச்சுகல் அனுமதி அளித்துள்ளது.

நாடற்றவர்கள் குடியுரிமை பெறவும், பெற்றோர் நாடற்றவர்களாக இருந்தாலும் அவர்களின் குழந்தைகளுக்குப் பிறப்புச் சான்றிதழ் அளிக்கவும் சட்டத் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது வடக்கு மெசடோனியா. கென்யா தனது நாட்டில் வசிக்கும் நாடற்ற 'பெம்பா' சமூகத்தைச் சேர்ந்த 7,000 பேருக்கு நிகழாண்டு குடியுரிமை வழங்கியுள்ளது. நாடற்றவர்களாகும் அபாயத்தில் இருந்த 3,000 பேருக்கு குடியுரிமை வழங்கியுள்ளது தான்சானியா.

கர்நாடக மாநிலத்தில் இவ்வாறு 15 வயதுச் சிறுவன் நாடற்ற நிலைக்குத் தள்ளப்படுவதை உயர்நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் தலையிட்டு தடுத்து நிறுத்தியது. 2008–ஆம் ஆண்டு இந்தியாவில் பிறந்த அந்தச் சிறுவனை, தன் மனைவியின் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்காக சிறுவனின் தந்தை கனடாவிலிருந்து பெங்களூரு வந்தார்.

நாளடைவில் அவரது தொடர்பு விட்டுப்போக, சிறுவனின் தாய், கனடா குடியுரிமை பெறுவதற்காக இந்தியக் குடியுரிமையை 2015–இல் கைவிட்டார். சிறுவனின் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) கடந்த மார்ச் மாதம் காலாவதியான நிலையில், கடவுச்சீட்டை புதுப்பிக்க வெளியுறவு அமைச்சகம் மறுப்பு தெரிவித்தது.

சிறுவனும், அவரது தாயும் கர்நாடக உயர்நீதிமன்றத்தை அணுகினர். மனிதாபிமான அடிப்படையில் சிறுவன் வெளிநாட்டுக்குச் சென்று தனது தாயுடன் சேரும் வகையில் அவருக்கு கடவுச்சீட்டைப் புதுப்பிக்கவும், அது சிறுவனின் 18 வயது வரை செல்லத்தக்கதாக இருக்கவும் வெளியுறவு அமைச்சகத்துக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

நாடுகளுக்கு இடையிலான போரும், உள்நாட்டுப் போரும் அகதிகளை உருவாக்குகின்றன என்றால், நாடுகளின் கொள்கைகளும், சட்டங்களும், சமூகப் புறக்கணிப்பும் நாடற்றவர்களை உருவாக்குகின்றன. உலகம் முழுவதும் இவ்வாறு 44 லட்சம் பேர் வாழ்கிறார்கள். இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.

'நாடற்ற தன்மைக்குப் பல காரணங்கள் இருந்தாலும், எளிய சட்டம் இயற்றுதல், கொள்கை மாற்றங்கள் மூலம் இந்த பிரச்னைக்குத் தீர்வு காண முடியும்' என்ற ஐ.நா. அகதிகள் முகமை தலைவர் பிலிப் கிராண்டியின் கூற்றை உலக நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

EVA STALIN IAS ACADEMY

# தில்லியில் மாசு அதிகரிப்பு: பயிர்க் கழிவுகள் எரிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்

## பஞ்சாப் உள்பட 4 மாநிலங்களுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு

நமது நிருபர்

**புது தில்லி, நவ. 7:** தில்லி - என்.சி.ஆர். பகுதிகளில் மாசு அளவு அதிகரித்துள்ள நிலையில், பயிர்க் கழிவுகள் எரிப்பதை உடனடியாக நிறுத்துவதை உறுதி செய்யுமாறு பஞ்சாப், ஹரியாணா, உத்தர பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய 4 மாநிலங்களுக்கு உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

மேலும், மாசுபாட்டால் 'மக்கள் இறக்க' அனுமதிக்க முடியாது என்றும் உச்சநீதிமன்றம் கூறியது.

தில்லி, என்சிஆர் பகுதியில் காற்று மாசடைந்திருப்பது தொடர்பான விவகாரத்தை உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கௌல், நீதிபதி சுதான்ஷு துலியா அடங்கிய அமர்வு விசாரித்தது. அப்போது, நீதிபதி கௌல் கூறுகையில், 'மன்னிக்கவும், இது மக்களின் ஆரோக்கியத்தின் முழுக் கொலையாகும். இதைக் கூற, வேறு எந்த சொற்றொடரும் என்னிடம் இல்லை' என்றார்.

மாசுபாட்டுக்கு ஒருவரையொருவர் மாநிலங்கள் பரஸ்பரம் குறை கூறுவதைக் கருத்தில்கொண்ட அமர்வு, 'எல்லா நேரத்திலும் அரசியல் போராக இருக்க முடியாது' என்றது.

சுற்றுச்சூழல் ஆர்வலர் எம்.சி. மேத்தா 1985-இல் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையில் பயிர்க் கழிவு எரிப்பு, வாகன மாசுபாடு, திறந்தவெளியில் கழிவுகளை எரித்தல் போன்ற பிரச்னைகள் குறித்து நீதிமன்றம் குறிப்பிட்டது.

மேலும், நெல் அறுவடையைத் தொடர்ந்து, பரவலாக பயிர்க் கழிவுகள் எரிப்பது குறித்து கவலை தெரிவித்த நீதிபதிகள் அமர்வு, 'எங்கள் கவலை என்னவெனில், இந்த பயிர்க் கழிவுகள் எரிப்பு நிறுத்தப்படவில்லை.

பயிர்க் கழிவு தீயைத் தடுக்க மாநிலங்கள் என்ன நடவடிக்கை எடுக்கின்றன? தில்லியை ஆண்டுதோறும் இதுபோன்று மாசுவால் பிரச்னையை எதிர்கொள்ளச் செய்ய முடியாது' என்று கூறியது. அப்போது, பஞ்சாப் சார்பில் ஆஜரான வழக்குரைஞர், 'பயிர்க் கழிவுகளை எரிக்கும் சம்பவங்கள் கடந்த ஆண்டைவிட 40 சதவீதம் குறைந்துள்ளது' என்றார்.

இதையடுத்து, அவரிடம் நீதிபதிகள் அமர்வு கூறியதாவது:

இதையெல்லாம் நாங்கள் நிறுத்த விரும்புகிறோம். நீங்கள் எப்படி செய்கிறீர்கள் என்பது எங்களுக்கு கவலையில்லை. அதை எவ்வாறு செய்வது என்பது உங்கள் பணி. பயிர்க் கழிவு எரிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். பலவந்தமான நடவடிக்கை மூலம் நீங்கள் அதை நிறுத்த வேண்டும்; சில சமயங்களில் ஊக்கத்தொகை மூலம், இதர செயல்கள் மூலம் நிறுத்தப்பட வேண்டும். மாசு அளவு அதிகரிப்பால் மக்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு வருகிறது.

மாசுவால் மக்கள் இறக்க அனுமதிக்க முடியாது. தில்லியில் வசிப்பவர்கள் ஒவ்வொரு வருடமும் இந்த நேரத்தில் உடல்நலப் பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர். ஏனெனில், பிரச்னைக்குத் தீர்வு காணப்படவில்லை.

தில்லி மாநகராட்சி திடக்கழிவுகளை திறந்த வெளியில் எரிக்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். பஞ்சாப், தில்லியையொட்டியுள்ள மற்ற மாநிலங்களான ஹரியாணா, ராஜஸ்தான் மற்றும் உத்தர பிரதேச மாநிலங்கள் பயிர்க் கழிவுகள் எரிப்பதை உடனடியாக நிறுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும், பயிர்க் கழிவுகள் எரிப்பதை நிறுத்த தலைமைச் செயலரின் ஒட்டுமொத்த மேற்பார்வையின் கீழ் சம்பந்தப்பட்ட உள்ளூர் ஸ்டேஷன் ஹவுஸ் ஆஃபிஸர் (எஸ்எச்ஓ) பொறுப்பேற்கச் செய்ய வேண்டும்.

பயிர்க் கழிவுகளை எரிப்பது மட்டுமே மாசுபாட்டுக்கு காரணம் என்று நாங்கள் கூறவில்லை. ஆனால், இது இந்த நேரத்தில் ஒரு



குறிப்பிடத்தக்க காரணியாக இருக்கிறது என்று கூறினர்.

மாசு விவகாரத்தில் நீதிமன்றத்துக்கு அமிகஸ் கியூரியாக உதவிடும் மூத்த வழக்குரைஞர் அபராஜிதா சிங், தில்லியில் காற்று மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்காக நிறுவப்பட்ட செயல்படாத புகை கோபுரங்கள் குறித்து சமீபத்தில் ஊடகத்தில் வந்த செய்திகள் குறித்து கூறினார். அப்போது, தில்லி மாசுக் கட்டுப்பாட்டுக் குழுவின் (டிபிசிசி) தலைவரை அடுத்த விசாரணை தேதியில் ஆஜராகுமாறு கேட்டுக்கொண்ட நீதிபதிகள் அமர்வு, ஸ்மோக் டவர்களை செயல்படுத்த விரும்புவதாகவும், அதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறும் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டது. மேலும், பிற மாநிலங்களில் பதிவுசெய்யப்பட்ட அதிக எண்ணிக்கையிலான டாக்சிகள் ஒரே ஒரு பயணியை ஏற்றிக் கொண்டு சாலையில் செல்வதைக் காண்பதாகக் கூறிய நீதிமன்றம், நகரத்தில் பதிவு செய்யப்பட்ட டாக்சிகள் மட்டுமே இங்குள்ள சாலைகளில் ஓடுவதை பரிசீலிக்குமாறு தில்லி அரசைக் கேட்டுக் கொண்டது.

பஞ்சாப் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர், பொருளாதார காரணங்களால் விவசாயிகள் பயிர்க் கழிவுகளை எரிப்பதாகக் கூறினார். அப்போது, மாற்றுத் தீர்வுகளுக்கு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டால், பயிர்க் கழிவுகள் எரிப்பதைத் தடுக்க அவர்களை வற்புறுத்தலாம் என்று அமர்விடம் தெரிவிக்கப்பட்டதைக் குறிப்பிட்டது.

பஞ்சாபில் நீர்மட்டம் குறைவதற்கு நெல் சாகுபடியும் ஒரு காரணம் என்று நீதிபதிகள் அமர்வு குறிப்பிட்டது.

மேலும், நீதிமன்றம் கூறுகையில், 'இந்த பிரச்னைகள் குறித்து விவாதிக்க அனைத்து பங்குதாரர்களின் கூட்டம் நடத்தப்பட வேண்டும். தினைகளை ஊக்குவிக்கும் நடவடிக்கையையும் அரசு மேற்கொண்டு வருகிறது. இந்தப் பிரச்னைக்கு உடனடி கவனம் மற்றும் நீதிமன்ற கண்காணிப்பு தேவைப்படுகிறது. மாசு பிரச்னை இருந்து வரும் நிலையில், அடுத்த ஆண்டு அல்லது அதற்குப் பிறகு இது நடக்காமல் இருக்க தீர்க்கப்பட வேண்டும்.

பெட்ரோல் அல்லது டீசலில் வாகனம் இயக்கப்படுகிறதா என்பதைக் குறிக்கும் வண்ண-குறியிடப்பட்ட ஸ்டிக்கர்களின் திட்டத்தை செயல்படுத்துவது பற்றி என்சிஆர் மாநிலங்கள் உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும்' என்று கூறியது.

பின்னர், நீதிபதிகள் அமர்வு, இந்த வழக்கை மீண்டும் விசாரணைக்காக வரும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைத்தது. இது ஒருபுறமிருக்க, பட்டாசு தடை விவகாரத்தை செவ்வாய்க்கிழமை விசாரித்த நீதிபதிகள் ஏ.எஸ்.போபண்ணா மற்றும் எம்.எம்.சுந்தரேஷ் அடங்கிய உச்சநீதிமன்றத்தின் மற்றொரு அமர்வு, பேரியம் அடங்கிய பட்டாசுகளை தடை செய்யும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவு தில்லி - என்.சி.ஆர் மட்டும் அல்லாமல் ஒவ்வொரு மாநிலத்தையும் கட்டுப்படுத்துகிறது என்று தெளிவுபடுத்தியது.

### தில்லியில் வாகனக் கட்டுப்பாட்டு திட்டம் முன்னர் வெற்றி பெற்றதா?

தில்லி அரசின் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் ஒற்றைப்படை – இரட்டைப்படை வாகனக் கட்டுப்பாட்டு திட்டம் முன்னர் வெற்றி பெற்றதா என்று செவ்வாய்க்கிழமை உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

தில்லி – தேசியத் தலைநகர் பிராந்தியத்தில் (என்சிஆர்) காற்று மாசுபாட்டைச் சீர்குலைப்பது தொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், ஒற்றைப்படை – இரட்டைப்படை வாகனக் கட்டுப்பாட்டு திட்டம் முன்பு செயல்படுத்தப்பட்டபோது வெற்றி பெற்றதா என்று தில்லி அரசின் வழக்குரைஞரிடம் கேள்வி எழுப்பியது. 'இவை அனைத்தும் 'ஆப்டிக்ஸ்' தான். இதுதான் பிரச்னை' என்று நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கௌல் மற்றும் சுதான்ஷு துலியா ஆகியோர் அடங்கிய அமர்வு கூறியது.

தீபாவளிக்கு அடுத்த நாளான நவம்பர் 13 முதல் மாசு அளவுகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ள நிலையில், ஒற்றைப்படை – இரட்டைப்படை எண்ணிலான வாகனக் கட்டுப்பாட்டு திட்டத்தை அமல்படுத்துவதற்கான முடிவை தில்லி அரசு அறிவித்த மறுதினம் நீதிமன்றம் இந்தக் கருத்தைத் தெரிவித்தது.

EVA STALIN IAS ACADEMY